**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts05sp052026.05
https://ngmtamil.in/

# The Importance and Challenges of Folk traditions in the Formation of Postcolonial Tamil Epistemology

**Dr. K. Jawahar*,**
Assistant Professor, Dept. of Tamil,
Central University of Tamil Nadu, Thiruvarur.
*Correspondence: kajawahar@gmail.com.

**Article Info**
Received on 15-May-2026, Revised on 18-May 2026, Accepted on 20-May-2026, Published on 27-May-2026

## ABSTRACT

In postcolonial studies, decolonization, the construction of identity, and the establishment of cultural distinctiveness are crucial processes. Within these, foregrounding a language's artistic and epistemological traditions is significant. However, when such traditions are presented, written or manuscript-based traditions are often given primary status, while folk or oral traditions are relegated to a secondary position. In this context, it is necessary to emphasize the primacy of folk traditions in the formation of Tamil epistemology. At the same time, it is equally important to identify and critically examine the challenges inherent in these traditions.

**Keywords**; *Postcolonialism, Postcolonial folklore studies, Oral tradition, Formation of Tamil epistemology.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# பின்காலனியத் தமிழறிவுருவாக்கத்தில் நாட்டுப்புற மரபுகளின் முதன்மையும் சவால்களும்

***முனைவர் க. ஜவகர்,** தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.

**ஆய்வுச் சுருக்கம்**

பின்காலனிய ஆய்வில் காலனிய நீக்கம், அடையாள உருவாக்கம், தனித்தன்மையை நிறுவுதல் என்பன முதன்மையானவை. இந்தச் செயல்தளங்களில் ஒரு மொழிசார் கலை, அறிவுமரபுகளை முன்வைத்தல் என்பது முக்கியத்துவம் பெறுகின்றது. அவ்வாறு முன்வைக்கிறபோது, எழுத்து அல்லது சுவடி மரபு முதல்நிலையிலும் நாட்டுப்புற அல்லது வாய்மொழி மரபு இரண்டாம் நிலையிலும் இருப்பதைக் காணமுடிகிறது. அந்தவகையில் தமிழ் அறிவுருவாக்கத்தில் நாட்டுப்புற மரபுகளின் முதன்மையை கவனப்படுத்தவேண்டியிருக்கிறது. அத்துடன் அவற்றில் உள்ள சவால்களையும் இனம் கண்டு ஆய்வுசெய்வதும் தேவையாகிறது.

**குறிச்சொற்கள்:** பின்காலனியம், பின்காலனிய நாட்டுப்புறவியல், வாய்மொழி மரபு, தமிழ் அறிவுருவாக்கம்

**முன்னுரை**

பின்காலனிய அறிவுமரபு கீழைத்தேய மரபுகளை முன்வைக்கிறது. இவற்றுள் காலனிய நீக்கம் எனும் கருத்தாக்கம் தேசம், மொழி முதலியவற்றின் பண்பாட்டு அடையாளங்களை முன்வைக்கிறது. இந்தியச் சூழலில் பல்வேறு பன்மைத்துவப் போக்குகளில், தமிழ் மரபின் அடையாளம் ஒரு முதன்மைக் கூறாக உள்ளது. பின்காலனியத் தமிழறிவுருவாக்கச் செயல் திட்டத்தில் எழுத்துமரபின்/ செவ்வியல் புலமை மரபின் செல்வாக்கே முதன்மையாக உள்ளது. நாட்டுப்புற அல்லது வாய்மொழி மரபின் செல்வாக்கு முதன்மையாக இல்லை. அந்த வகையில் நாட்டுப்புற மரபுகளை உள்ளடக்கிய நிலையில் அணுகுவதும் அவற்றின் சவால்களை இனங்கண்டு ஆய்வதும் தேவையாகிறது.

**பின்காலனியமும் அடையாள நிறுவலும்**

அடையாளத்தை வடிவமைத்தல், காலனிய நீக்கம் என்பது பின்காலனியத்தின் முதன்மையான கூறுகள். அவற்றுள் விளிம்புநிலைப் பார்வைகளின் முதன்மையை காயத்ரி சக்ரவர்த்தி ஸ்பிவாக் போன்றவர்கள் முன்வைக்கின்றனர். எனவே பின்காலனிய நோக்குநிலையில் இருந்து தமிழறிவுருவாக்கம் என்று வருகின்றபோது எழுத்துமரபு மையம் கொள்வதை கவனிக்க வேண்டியிருக்கிறது. நாட்டுப்புற இயனறிவுமரபுகளில் இருந்து உருவாக்கம் பெற்றுத் தனதாக்கிக்கொண்ட எழுத்து/செவ்வியல் மரபுகள் அவற்றைப் பொருட்படுத்தாமல் புறந்தள்ளுவது

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/tirjts05sp052026 

எழுத்துமரபின் முற்றதிகாரத்தையே காட்டுகிறது. அதாவது அறிவுருவாக்கச் செயல்திட்டம் ஒரு அதிகார நிறுவனமாக வடிவம்கொண்டு வழக்கு மரபுகளை அடிமை அல்லது மறைநிலைக்குத் தள்ளுகிறது. இவ்விடத்தில் அறிவுருவாக்க அதிகாரச் செயல்திட்டத்தின் இயங்கியலை மறுவாய்வு செய்வது அவசியமாகிறது. இரண்டாம் நிலையில், தமிழ் அறிவுருவாக்க அரசியலில் வாய்மொழி மரபுகளை அப்படியே கேள்வியின்றி ஏற்கவும் முடியாது. அங்கும் பல உள் முரண்கள் உள்ளன. எனவே இந்த இரு நிலைகளையும் கணக்கில் கொண்டு வடிவமைப்பது தேவையாகிறது.

**நாட்டுப்புற மரபின் முதன்மை**

வாய்மொழி மரபாகிய உலகியல் வழக்கு இழிவாகவும் எழுத்துமரபாகிய செய்யுள் வழக்கு உயர்வாகவும் கருதக்கூடிய போக்கு செவ்வியல் காலமுதல் இன்றுவரையுள்ளதைப் பார்க்கலாம். “காட்டுமிராண்டித் தனம்- நாகரிகம் என்ற எதிர்வுகள் தொடர்பான கருத்துக்கட்டமைப்புமுறை பண்டைய தமிழ் இலக்கியங்களிலேயே தொடங்கிவிட்டதைக் காணலாம் எனக்கூறும் இ. முத்தையா, “சங்க இலக்கியங்களில் மட்டுமின்றிப் பிற இலக்கியங்கள், கல்வெட்டுப் பனுவல்கள் போன்றவற்றிலும் பார்ப்பனர்களும் வேளாளர் மற்றும் வணிகர்களும் மதிப்புமிக்கவர்களாகவும் நாகரிகமானவர்களாகவுமே குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிரானவர்கள் காட்டுமிராண்டிகளாகக் கருதப்பட்டுள்ளனர்” என்கிறார் (முத்தையா.இ. : 2012:4-5). சங்கப் புலவர்களும் எளியவர்களை, உழைக்கும் மக்களை இழிவுபடுத்திப் பாடியுள்ளனர். இப்போக்கு வரலாறு நெடுகிலும் இருப்பதைக் காணமுடிகிறது. ஆனால் வரலாறு, சமூக இயங்கியல் என்பன எல்லோருடனும் இணைந்ததே. “படித்தோரே பழமொழிகளை உருவாக்கினர் என்ற கருத்தில், ‘ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் உருவாக்கினர்’ என்றும், இலக்கியவாணர் உருவாக்கினர் என்றும் கூறுதல் பொருந்தாது. இவர்களும் உருவாக்கியிருக்கலாம் என்பதே சரி”(லூர்து. தே. : 1988: 01). இப்படியான நோக்குநிலைகள் பொதுத்தளத்திலும் கலை, அறிவுப் புலத்திலும் உருவாகாமைக்கு எழுத்துமரபின், புலமை மரபின் ஆதிக்கமே காரணமாகும். என்றபோதும் பாணர் மரபிலிருந்து புலவர் மரபாகிய நாடகத்தன்மையிலான செய்யுள் மரபு உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை, கைலாசபதி, சிவத்தம்பி போன்றோரின் ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. சங்கப் பாடல்கள் வாய்மொழி மரபின் தொடர்ச்சியானவை என்பதை நிறுவும் தமிழவன், “வாய்மொழி வாய்பாடுகளை உள்ளே வைத்திருக்கிற எழுத்து மொழிநடையில் இன்று சங்கப் பாடல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றில் முதலாவதான பெயர்முன் அடை வரும் வாய்பாட்டுத் தன்மைகொண்ட ஓர் அடை அமைப்புகள் வாய்மொழிப் பாடலின் ஆதிவடிவத்தைக் காட்டுகின்றன”(தமிழவன்:2021: 130) என்று கூறுகிறார். இவ்வாறு வாய்மொழி மரபின் தொடர்ச்சியாகவே எழுத்து அல்லது புலமை மரபு அமைந்தாலும் அது அம்மரபைப் புறநிலையில்

வைத்துக்காணும் போக்கு வரலாற்றில் மையமாக அமைந்ததை மறுக்கமுடியாது. வாய்மொழி மரபின் தொடர்ச்சியே எழுத்து அல்லது செம்மை மரபு என்பன போன்ற இவ்வாறான ஆய்வுகள் செவ்வியல் மேல்நிலையாக்கக் கருத்தியலைத் தகர்க்கின்றன. ஆயினும் மேல்நிலையாக்க எழுத்து மரபு அதிகாரமாகத் தொடர்வதையும் காணமுடிகிறது. அந்த வகையில், தொல்காப்பியம் வழக்கு மரபை உள்ளடக்கினாலும் செய்யுள் அல்லது புலமைமரபின் நோக்குநிலைக்கு முதன்மை தரும் பார்வையைக் கொண்டிருக்கிறது. வழக்குமரபைப் புலமைமரபு கைக்கொள்ளும் நோக்குநிலையை இப்பார்வை காட்டுகிறது எனக் கூறலாம். அறிவுருவாக்கச் செயல்பாட்டின் பகுதியான இலக்கண உருவாக்கத்தில் இவ்வாறான போக்குகள் தொடக்கமுதல் நடைபெறுவதைக் காணவியலும். தொன்மையான, இயல்பான நாட்டுப்புற மரபிலிருந்து உருவான எழுத்து மரபு தன்னை மேம்பட்டதாக, அதிகாரமுடையதாக வரலாற்றில் நிறுவிக்கொண்டது. அதாவது புலமை மரபின் விளைச்சலான எழுத்துமரபின் பிறழ்நிலை வடிவங்களே, இழிவடிவங்களே நாட்டுப்புற மரபுகள்(பேச்சுமொழி, வட்டாரமொழி) என்ற மேலாதிக்க உளவியல் இவ்வாறே தொடர்கிறது. இலக்கிய, இலக்கண மேற்கோள்களையே நம்பகத் தன்மையென்று முன்னெடுக்கும் போக்கும் இவ்வாறே அமைகின்றன. மொழிப் பொதுமையாக்கச் செயல்பாடு இவ்வாறு வரலாற்றில் நிகழுமென்பது ஒருபுறம் ஏற்புடையதாக இருப்பினும் பன்மைக் கூறுகளை விளிம்பு அல்லது இன்மையாக்குதலை கவனப்படுத்தவேண்டியிருக்கிறது.

பின்காலனியச் சூழலில் காலனிய நீக்கம், அடையாள அரசியல் என்பன போன்ற நிலைகளில், தமிழ்ப் பண்பாடு, தமிழ் அறிவு – கலைமரபு என்று வருகின்றபோது எழுத்து, செவ்வியல் தன்மைக் கூறுகளை முதன்மைப்படுத்தும் போக்கு தொடர்வதையும் இவ்வாறான மேல்நிலையாக்கத்தின் ஒரு பகுதியே எனலாம். ஏனெனில் எழுத்து அல்லது மேல்நிலையாக்க மரபு ஒற்றைத்தன்மையை முன்வைப்பனவாக உள்ளன. இந்த மேல்நிலையாக்கம் வாய்மொழி மரபின் பன்மை வடிவங்களைப் புறந்தள்ளுகிறது. தமிழ், தமிழ்ப் பண்பாடு, தமிழ் அறிவு என்பது எழுத்து மரபை அடிப்படையாகக் கொண்ட மேல்/உயர்குடிகளின் – அறிவுஜீவிகளின் கொடையாக முன்வைக்கப்படுகிறது. தொல்காப்பியமும், ‘வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே’ என இதையே குறிப்பிடுகிறது. பின்காலனியத் தமிழ் அடையாள அரசியலில் வீரமாமுனிவர், எல்லீஸ், கால்டுவெல் முதலியோர் உருவாக்கிய உலகளாவிய தடம் ஒருபுறமிருப்பினும் சைவத்தன்மையான தமிழ் அடையாளமாகவும், பகுத்தறிவு மரபாகவும் தமிழ்ப் பண்பாட்டை முன்னிருத்துவதில் கவனம் குவிக்கப்பெற்றது. இரண்டையும் இடையீடு செய்யும் போக்கும் ஒருவாறு முன்னெடுக்கப்பட்டது. தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் முதலியன முன்வைக்கப்பட்டன. பெரியாரியம், மார்க்சியம் முதலியன இன்னொரு தளத்தில் நவீனமாக இயங்கின. இவ்வாறான பல போக்குகள் இருப்பினும் வாய்மொழி,

நாட்டுப்புற மரபுகளின் பன்மை வடிவங்கள் இவ்வாறான போக்குகளினூடே தமிழ் அறிவுருவாக்கத்தில் முதன்மையானதாக கவனம் குவிக்கப்பட்டனவா என்பதை ஆராய வேண்டியிருக்கிறது.

“தமிழ்ப் பண்பாட்டுச் சொல்லாடல்களில் காட்டுமிராண்டித்தனம்- நாகரிகம் என்ற எதிர்வுகள் பழமையானவை என்றாலும் இவை காலனிய ஆட்சியாளர்களால் புதிய முறையில் கையாளப்பட்டன. நிறுவன சமயத்தவரின் கடவுள் நம்பிக்கைகளையும் வழிபாட்டுமுறைகளையும் அவர்கள் அறிவியல் பார்வைக்கு உட்படுத்தியதில்லை. மூடநம்பிக்கைகளாகக் கருதியதில்லை. அவற்றை நாகரிகமான நடவடிக்கைகளாகத்தான் கருதினார்கள். ஆனால் நாட்டுப்புற மக்களின் பண்பாட்டு நடவடிக்கைகளை, குறிப்பாக, வழிபாட்டு முறைகளையும் சடங்குகளையும் அறிவியல் பார்வைக்கு உட்படுத்தினார்கள். அவற்றை மூடநம்பிக்கைகளால் ஆனவை என முத்திரை குத்தி ஒதுக்கி வைத்தனர். அவர்களுடைய வழிபாட்டு முறைகளைக் காட்டுமிராண்டித் தனமானவை எனக் குறிப்பிட்டனர்”( முத்தையா. இ.: 2012:8). இ. முத்தையா குறிப்பிடும் இத்தகைய காலனிய மேல்நிலையாதிக்க உளவியலே செவ்வியல், புலமைமரபாகிய எழுத்துமரபு மேன்மை என்ற கருத்தாக்கத்திற்கும் அடித்தளமாக அமைகிறது. இவ்வாறான போக்குகளை மறுவரையறை செய்யுமிடத்திலிருந்தே தமிழறிவுருவாக்கம் முழுமையை அடைய இயலும்.

இந்நிலையில்தான் நாட்டுப்புற மரபுகளான பழமொழிகள், பாடல்கள், கதைகள் என்ற பெருந்தொகுதிகளும் சடங்குகள்- கூத்து முதலிய நிகழ்த்துக்கலை வடிவங்களும், தொழில்- வாழ்வியல்சார் அறிவியல் நுட்பங்களும், இயற்கை – சூழலியல்- உயிரினம்- பருவகால அறிதல் முறைகளும், நம்பிக்கைகள் என்று உள்ள பெரும் உயிர்ப்பான கூறுகள் முதன்மையாகின்றன. பின்காலனியத் தமிழ் அடையாள உருவாக்கத்தில் இவைகளை முதன்மைப்படுத்துவதும் இவற்றினூடாகத் தமிழ்ச் சமூக அறிவுருக்கத்தை ஆய்வதும் முன்னெடுப்பதும் அவசியமாகிறது. சுவடி மரபின் அதிகாரம் காகித மரபிற்கு இடம்பெயர்க்கப்பட்டதைக் கட்டுடைத்து உயிர்ப்பான நாட்டுப்புற பெரும்இயங்கியல் மரபை உள்ளடக்கிக் காணவேண்டியிருக்கிறது. எழுத்து அல்லது செவ்வியல் மரபு மேன்மை என்பதும் நாட்டுப்புற மரபு இழிவு என்பதுமான கருத்தியல்களினூடே பொருளாதார, சமூக, அதிகார ஏற்றத்தாழ்வுக் கருத்தியல்கள் மையம் கொள்வதையும் ஒற்றைக் கருத்தாக்கத்தை வலியுறுத்தும் போக்கு முன்னிற்பதையும் தமிழ் வரலாற்றில் காணமுடியும். அந்த மேல்நிலையாக்க மரபிலும் உள்முரணியக்கம் இருப்பதையும் ஒருபுறம் கவனிக்க வேண்டியிருக்கிறது என்றபோதும் வாய்மொழி மரபின் பன்மை வடிவ முதன்மையாக்கமே இங்கு முதன்மையாகிறது. இந்நிலையில் நாட்டுப்புற கலை, அறிவுமரபுகளின் முதன்மை என்பது பின்காலனியத் தமிழ் அறிவுருவாக்கத்தில் அடிப்படையானது. ஏனெனில் தமிழின் பன்மை வடிவங்கள், வழிவழியாகத் தொடரும் பல்வேறு

வட்டார சிறு மரபுகள், பழங்குடிகளின் அறிவுத்தொகுதிகள் முதலியவற்றை உள்ளடக்கிக் காணுகின்றபோதே தமிழின் அறிவுசார் பன்மைவடிவங்கள் முழுத்துலக்கமடையும். அந்த வகையில் பின்காலனிய நாட்டுப்புறவியல் என்பது மேல்நிலையாக்கம் செய்யப்பட்ட வடிவங்களை மட்டும் கணக்கில் கொள்வதை மறுத்து, நாட்டுப்புற பன்மை மரபுகளின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கிக் காணும் முழுமையை நோக்கியதாக உள்ளது.

**நாட்டுப்புற மரபும் சவால்களும்**

இரண்டாம் நிலையில், தமிழறிவுருவாக்க அடையாள அரசியலில் வாய்மொழி மரபுகளின் முதன்மை என்றாலும் அதை அப்படியே கேள்வியின்றி ஏற்கவும் இயலாது. சாதிய, பாலின, பொருளாதார, நிலவியல், தொழில் எனக் குறிப்பிட்ட சில வேறுபாடுகளையும் அவற்றைத் தக்கவைக்கும் உள்ளியங்கியல் கூறுகளையும் விமர்சனரீதியாக அணுகவேண்டியதேவையும் இருக்கிறது.

தமிழில் வட்டாரத் தன்மையிலான படைப்பிலக்கியங்கள், திரைவெளிகள், ஆய்வுகள் பரவல்தன்மையை உடைய சூழல் என்பது பின்காலனிய அடையாளக் கருத்தியலில் கவனம் செலுத்தவேண்டிய விடமாகிறது. தலித்தியம், பெண்ணியம், மாற்றுத்திறனியம், பழங்குடியினர் வாழ்வியல், பால்புதுமையினர் முதலிய விளிம்புநிலைசார் அடையாளச் சொல்லாடல்கள் மையம் பெறுகிற தன்மையில் இவ்வாறான போக்குகளும் சேர்ந்து ஊடாட்டம் நிகழ்த்துகிறது. எனவே தமிழ் அறிவுருவாக்கத்தில் நாட்டுப்புறவியல்சார் வட்டாரப் பண்புகளை முதன்மைப் படுத்துகின்றபோது அவற்றுள் இயங்கும் மேலாதிக்கப் பண்புகளையும் ஆய்வது முன்னுள்ள முதன்மை விடயமாகிறது. அதாவது, ஒரு பெரும் வட்டார மரபு பிற சிறு வட்டார மரபுகளை பின்னுக்குத்தள்ளுவதும் சாதிய, பாலின வேறுபாட்டு நிலையிலான போக்குகளையும் ஆய்வில் கவனம் கொள்ளவேண்டியிருக்கிறது.

நாட்டுப்புற வழக்காறுகள், சடங்குள், அறிவு- கலை மரபுகள், பண்பாட்டு மொழிவடிவம் முதலிய பல கூறுகளில், ‘சாதிய, பாலின ஏற்றத்தாழ்வுப் போக்குகள்’ இருப்பதைக் காணமுடிகிறது (முத்தையா. இ. : 2013: 32). பழங்குடி மரபுகளின் போக்குகளை இன்னொரு தளத்திலிருந்து ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது. ஏனெனில் சமவெளி அல்லது உற்பத்தியோடு தொடர்புடைய நிலம்சார் சமூகக் குழுக்களின் பண்பாடு மேன்மையானது உழைக்கும் மற்றும் பழங்குடிகளின் அறிவுமரபு உயர்வல்ல என்ற பண்பாட்டு மேலாதிக்க உளவியல் மேல்நிலையாக்கம் செய்யப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

சமூக, பண்பாட்டு இயங்குவெளிகளின் அமைப்புகளை, அவற்றின் உள்ளிணைவுகளைக் காணும் அதேநேரத்தில் அவற்றை முற்றான விமர்சனமற்ற ஒரு தமிழ் அறிவுருவாக்க அடையாளமாக முன்னிறுத்துவது சவாலான ஒன்றாகும். இவ்விடத்தில் நாட்டுப்புற கலை, அறிவுமரபுசார்

தற்சார்புநிலைப் ஆய்வுகளின்மீதான விமர்சனத்தைக் கருத்தில்கொண்டு செயல்படுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகிறது.

**முடிவுரை**

நாட்டுப்புற மரபுகளின் முதன்மையைத் தமிழ் அறிவுருவாக்கப் போக்கில் இணைப்பதன் தேவையைப் பின்காலனியச் சூழலில் முன்வைக்கும் அதேநேரத்தில் அவற்றின் இயங்கியலுக்கான சமூக, வரலாற்று, அரசியல், பொருளியல் காரணிகளை ஆய்ந்து அவற்றின் உள்முரண்களைச் சமகால நோக்குநிலையில் இருந்து ஆக்கபூர்வமாக அணுதல் அவசியமாகிறது. அந்த வகையில், பின்காலனியத் தமிழறிவுருவாக்கத்தில் நாட்டுப்புற மரபுகளின் உள்ளியக்கமாக உள்ள ஏற்றத்தாழ்வுசார் முரண்களை சமகாலத் தன்மையில் விமர்சனரீதியாக அணுகியே முன்வைக்கவேண்டியிருக்கிறது. இவ்வாறான நோக்குநிலையே தமிழறிவுருவாக்கம்சார் ஆக்கபூர்வமான உரையாடலை முன்னகர்த்தும் என்று கூறவியலும்.

**துணையன்கள்:**

[1]. தமிழவன், வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாட்டு நோக்கில் சங்க இலக்கியம், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை: 2021.

[2]. முத்தையா. இ., அடித்தள மக்களின் குறியீட்டுப் பயணவெளிகள், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை:2013.

[3]. முத்தையா. இ., பண்பாட்டுச் சொல்லாடல்களில் காட்டுமிராண்டித்தனமும் நாகரிகமும், அடித்தள மக்களின் குறியீட்டுப் பயணவெளிகள், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை:2012.

[4]. லூர்து.தெ., நாட்டார் வழக்காறுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை: 1988.

## References

[1]. Lourdu, T. *Naattaar Vazhakkaarugal* [Folklore]. Manivasagar Pathippagam, 1988.

[2]. Muthiah, I. *Adithala Makkalin Kuriyeettu Payanaveligal* [Symbolic Travel Spaces of Subaltern People]. New Century Book House, 2013.

[3]. Muthiah, I. "Panbaattu Cholladalgalil Kaattumiranditthanamum Naagarigamum" [Barbarism and Civilization in Cultural Discourses]. *Adithala Makkalin Kuriyeettu Payanaveligal* [Symbolic Travel Spaces of Subaltern People], New Century Book House, 2012.

[4]. Tamilavan. *Vaimozhi Vaipaattu Kotpaattu Nokkil Sanga Ilakkiyam* [Sangam Literature from the Perspective of Oral Formulaic Theory]. Central Institute of Classical Tamil, 2021.